முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.16.03.2026

O.S No. 146/2019

வா.சா.1- பாவா ஜோஸ்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

பிராதில் உள்ள விவரங்களும் முதன்மை விசாரணையின் உள்ள விவரங்களும் என் வழக்கறிஞருக்கு நான் சொன்னேன். பிரதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். பி பட்டிகை சொத்தின் சர்வே எண்ணோ பரப்பளவோ நான் என் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தின் முழுமையான விவரங்களை சொன்னால் மட்டுமே திட்டபடுத்தி பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வழக்கு எ பட்டிகை சொத்திற்கு வழக்கு பி பட்டிகை வழியாக மட்டுமே வந்து செல்ல முடியும் என்று பிராதிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. என் அம்மா ஈஸ்வரகனிக்கு வழக்கு எ பட்டிகை சொத்தின் வடக்கு மற்றும் மேற்கு பக்கம் சொத்து உள்ளது என்றால் சரி.

என் அம்மாவிற்கு உரிமைபட்ட 29 ½ சென்ட்டில் எனக்கு 3 சென்ட் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரி. பி பட்டிகை சொத்தின் தெற்கு மற்றும் மேற்கு பக்கம் ரோடு இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் தெற்கு பக்கம் மட்டுமே சொல்லியுள்ளேன். மேற்கு பக்கம் ரோடு இல்லை. மேற்கு பக்கம் ரோடு இருப்பதாக நான் சொல்லி இருந்தால் அது தவறான விவரம் என்றால் சரி. பி பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் ரோடு இருந்தால் என் அம்மாவின் 26 ½ சென்ட் சொத்தை தொட்டு தெற்கு பக்கம் செல்லும் என்றால் சரியல்ல அப்படி ஒரு ரோடே இல்லை. என் அம்மாவுடன் நான் ஒற்றுமையாக இல்லை பேச மாட்டார்கள். அந்த விவரத்தை என் பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரி. அப்போது நாங்கள் ஒற்றுமையாக இருந்தோம். இந்த வழக்கில் என் அம்மாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. அதற்கு தேவை இல்லை. உண்மையில் என் அம்மாவின் 26 1/2 சென்ட்டின் தெற்கு பக்கம் ரோடு உள்ளது என்றாலும் அவரை தரப்பினராக சேர்த்தால்

உண்மை தெரிய வந்து விடும் என்பதற்காக என் அம்மாவுடன் ஒற்றுமையாக இல்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல,

என் சொத்தையோ என் அம்மா சொத்தையோ தனியாக திட்டபடுத்தி உட்பிரிவு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்பு என் சொத்தை உட்பிரிவு செய்து விட்டேன் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யலாம் என்றால் சரி. உண்மையில் உட்பிரிவு செய்யவில்லை என்றாலும் என் சொத்தும் அம்மாவின் சொத்தும் ஒரேபிரிவில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு எ பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் அஞ்சுகிராம கிராம ரீசர்வே எண்.740/1,5,6 ஆகிய அரசு சொத்துக்கள் உள்ளது என்றால் சரி. ரீசர்வே எண்.740/1,5,6 ஆகிய அரசு சொத்துக்களில் எந்த சொத்தில் நான் பாதை கேட்கிறேன் என்றால் வழக்கிற்கு பின்பு தான் மேற்படி உட்பிரிவு செய்யபட்டது வழக்கு தாக்கல் செய்தபோது மேற்படி சொத்துக்கள் ஒரே சொத்துக்களாக இருந்ததால் எனக்கு அது குறித்து தெரியாது.

ரீசர்வே எண்.740/1,5,6 ஆகிய அரசு சொத்துக்களை நான் பாதையாக எந்த பகுதியையும் பயன்படுத்தாததால் தான் எந்த சர்வே எண் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் என் பிராதில் பி பட்டிகை சொத்தின் சர்வே எண்ணும் பரப்பளவும் நான் சொல்லவில்லை என்றாலும் அதன் 4 எல்லைகளை தவறாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்தை பாதையாக நானோ என் அம்மாவோ பயன்படுத்தியதற்கு ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ரீசர்வே எண்.740/1,5,6 ஆகிய இடத்தில் ரேசன் கடையும் அஞ்சுகிராம கிராம நிர்வாக அலுவலகமும் ஆரம்பசுகாதார மையமும் உள்ளது என்றால் சரி. வழக்கு தாக்கல் செய்யும்போது இல்லை தற்போது உள்ளது. 2020 ல் கட்டினார்கள்.

2020 ல் ஆரம்பசுகாதார நிலையம் கட்டினார்கள் என்பதற்கு பிராதை திருத்தம் செய்து நடிவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். அந்த 3 அ லுவலகமும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கானது என்றாலும் அரசு பாதுகாப்பாக வைக்கவேண்டும் என்றாலும் சரி. எனக்கும் என் அம்மாவுக்கும் ரீசர்வே எண்.739/11,12,13,14 ஆகிய நிலங்கள் உரிமையாக உள்ளது என்றால் சரியல்ல 739/12 மட்டுமே உரிமையாக உள்ளது. உட்பிரிவு செய்த சர்வே எண் விவரம் எனக்கு தெரியாது என்பதால் 739/11,13,14 ஆகிய சர்வேயில் சொத்துக்கள் உள்ள விவரம் தெரியாது என்றால் சரியல்ல.

ரீசர்வே எண்740/4 ல் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரி. பேருந்து நிறுத்தம் செல்ல 740/13 ல் பாதை உள்ளது என்றால் சரியல்ல. பேருந்து நிலையம் வருவதற்கு 740/13 ல் உள்ள பாதையை என் சொத்திற்கு செல்வதற்கு நானும் பொதுமக்களும் பயன்படுத்தலாம் என்றால் சரியல்ல. சம்பந்தமே இல்லாத சர்வே எண்ணாகும். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை 5.8.2019 அன்று அவசரமாக அழைத்து சென்றதில் பார்வையிட்டார் அவர் தாக்கல் செய்த இடைக்கால அறிக்கையை படித்து பார்த்தேன். அவரது இடைக்கால அறிக்கையில் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு முறைப்படி அறிவிப்பு கொடுத்து மீண்டும் பட்டிகை சொத்தை பார்வையிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. நீதிமன்ற ஆணையர் அதன் பின்பு வழக்கு சொத்தை வந்து பார்வையிடவில்லை. நான் நீதிமன்றத்தில் முறையிட்டு ஆணையரை பார்வையிட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

வேறு பாதை இருக்கும் விவரம் தெரியவந்து விடும் என்பதற்காக ஆணையரை அளவீடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இடைக்கால அறிக்கையில் பி பட்டிகை சொத்தை தவிர வேறு பாதை இல்லை என்று சொல்லிய விவரம்

தவறானது என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்தில் சர்வே எண்ணோ பரப்பளவோ எல்கையோ சரியாக சொல்லாததால் ஆணையர் பி பட்டிகை சொத்தை நிர்ணயபடுத்த முடியாத சூழ்நிலையில் பி பட்டிகை சொத்தை தவிர வேறு பாதை இல்லை என்று சொல்லிய விவரம் தவறானது என்றால் சரியல்ல. பொய்யான விவரங்களை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கிற்கான எந்த முகாந்தரமும் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.